## தன்னை உருக்கி எம்மை வளர்த்தவரை இங்கே தேடுகின்றோம்!

"மாரிமலர்"



மூளாய்தெற்கைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்டு
மானிடத்தின் மனங்களை கவர்ந்து வாழ்ந்த தாய்

அமரர்

# திருமதி. மாரிமுத்து கந்தையா

அவர்களின்

நீங்காத நினைவுக்காய் மலரும்

# நினைவுமலர்

**09.11.2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

தன்னை உருக்கி எம்மை வளர்த்தவரை இங்கே தேடுகின்றோம்



மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டு மானிடத்தின் மனங்களைக் கவர்ந்து வாழ்ந்ததாய்

அமரர் ***திருமதி***

மாரிமுத்து கந்தையா அவர்களின்

நீங்காத நினைவுக்காய் மலரும்

# *நினைவு மலர்*

**09. 11. 2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உ
சிவமயம்

காலத்தால் எமைப் பெற்று வளர்த்தெடுத்து
ஆளாக்கிய தெய்வத்தாய்
அமரர் திருமதி மாரிமுத்து கந்தையா
அவர்களின் திருப்பாத கமலங்களிற்கு இம்மலர்
சர்ப்பணமாகுக.

**பேடென்றும் ஆணென்றும் பிரிவொன்றும்**
**காட்டாமல்**
**ஓடென்று தான்தேய்ந்து தினமெம்மை**
**வளர்த்தெடுத்த**
**வீடென்ற கோயிலுக்குள் வீற்றிருந்த**
**தெய்வத்தாய்**
**மேடென்றும் பள்ளமென்றும் பிரித்தறியார்**
**மாரிமுத்து**
**பாடெல்லாம் தான்பட்டு எமைக்**
**கோடுகீறி வளர்த்திட்டு**
**நாடென்று நாடித் தெய்வத் திருவூருள்**
**புகுந்ததனால்**
**வாடென்றால் வாடிடாத நினைவு**
**மலரென்று நாமெடுத்து**
**சூடென்று அவர் பாதம் சூடுகின்றோம்**
**சமர்ப்பணமே!**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மைக்கோர் இலக்கணமாய் தரணியிலே வாழ்ந்து மறைந்த
தாயார் திருமதி மாரிமுத்து கந்தையா அவர்கள்

புன்னகை பூத்தமுகம் பெண்மையின் பெருத்தகுணம்
அன்பினால் ஆனவாழ்க்கை அனைவர்க்கும் உதவுகரம்
அன்பிலோ துன்பிலோ ஒன்றாய் இரண்டறக்கலக்கும்பாங்கு
தன்னிலே கொண்டதாயார் மாரிமுத்து கந்தையா இவரேகான்.

மலர்வு
12 . 09 . 1930



உதிர்வு
10 . 10 . 2019

அமரர் அன்னையார் திருமதி.

# மாரிமுத்து கந்தையா அவர்களின்

ஆத்மாவை நாங்கள் ஆண்டாண்டு தோறும் போற்றிப் பூசிப்பதற்கான

## திதிவெண்பா

மாரிமுத்து என்றதொரு மாண்புறுதாய் மண்பிறந்து
ஊரினிற்கும் உறவினிற்கும் உயர்விருதாய் இருந்திட்டு
யாரினிற்கும் உடல்விடுத்துப் பரமனடி சேர்ந்த திதி-தமிழ்
வாரிவார்க்கும் புரட்டாதிபூர்வ திரயோதசியாம் என்றே துதி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வெட்டைக் கவனிப்போம்

சுற்றிச் சுழன்றுவரும் பூமிப்பந்தில் வாழ்ந்தவர்களதும் மறைந்தவர்களதும் வரலாறுகள் அழியாமல் இருக்கவேண்டும் என்பது உலக நியதியாகும் அந்தவகையிலேதான் வாழ்ந்து மறைந்தவர்களுக்கு வாழ்பவர்கள் வரலாறுகளை எழுதி வைக்கிறார்கள். அதிலேயும் பிரம்மதேவரின் அவதாரமாகச் சிருஸ்டிக்கப்படுகின்ற ஒருதாயின் வரலாறும் அழியாமல் இருக்கவேண்டுமென்பது மிகமிக முக்கியமானதாகும். வார்த்தையிலே வடிக்கமுடியாத ஒருதாயின் தியாகச் செயற்பாடுகள் வெறும் கண்ணீரோடு கரைந்து போய்விடக் கூடாது. அது மற்றவர்களின் கவனத்தை ஈர்த்து எல்லோரும் தாயின் பெருமையை உணர்ந்து கொள்ள வேண்டும். எல்லோருக்கும் தாய்மார் இருக்கிறார்கள். ஆனால் எங்களுடைய தாய்க்கு எல்லோருமே பிள்ளைகள் அவருடைய வாழ்வும் வரலாறும் எங்களுக்கு வாழ்வியல் தத்துவங்களை எடுத்தியம்புகிறது. தாயில்லாமல் நாமில்லை தானே எவரும் பிறந்ததில்லை எமக்கொருதாய் இருக்கின்றார் அவர் என்றும் எங்களைக் காக்கின்றார் என்பது ஒருதாயின் தனித்துவத்தை எல்லோருக்கும் உணர்த்துகின்றது. அத்தகைய தாய்மாருள் ஒருவராக விளங்குகின்ற எமது தாயின் வாழ்வியல் வரலாறும் என்றும் அழியாமல் இருந்து எங்களை வழிநடத்த வேண்டும் என்பதற்காகவே அழியாமல் இருப்பதன் இன்னொரு பெயரான கல்வெட்டு என்ற பெயரில் நாம் இதனை வெளியிடுகின்றோம். ஒரு தாயின் இனிய பந்தத்தை அனுபவித்தவர்களுக்கும் அனுபவிப்பவர்களுக்கும் இது ஒரு வழிகாட்டல் கைநூல் என்ற வகையிலே இக்கல்வெட்டினைத் தங்கள் கைகளில் ஒப்படைக்கின்றோம்.

நன்றி

மாரி வெள்ளம்

மாரிமுத்து என்றதொரு மாதரசி பிறந்திலரேல்
நேரியதோர் பெண்மைக்கு நெடுஞ்சாட்சி கண்டுமிரோம்
ஊரிலவர் பிறந்துயர்ந்த நெறிகாட்டி மறைந்ததனால் - மனத்
தேரிலவரை ஏற்றி நாங்கள் தின்ம் தினம் நினைவு கூர்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திருமதி மாரிமுத்து கந்தையா அவர்களின் ஆத்ம
விமோசனத்திற்காக
பஞ்சபுராணத்தை விசுவாசமாக ஓதுவோமாக

பஞ்ச புராணத்தை இங்கிதமாய் ஓதுவோற்கு
நெஞ்சழுக்கு ஓடும் மனச் கஞ்கலங்கள் தீரும்
வஞ்சகத்தினோடு வெறும் வார்த்தையென்று ஓதுவோற்கு
எஞ்சுவது பலனன்று தீயபலன் ஒன்றே!

திருச்சிற்றம்பலம்



விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதும் நாவலர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவள் மாட வீதி
மருகநிலாவிய மைந்தர் கொல்வாய்
கெங்கயரால் புனல் செல்வ மல்கும்
சீர்கொள் செங்காட்டிடங் குடியதனுள்
கங்கும் விளங்கெரி ஏந்தி ஆடும்
கணபதீச்சர காமுறவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே!

திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமாறிசையே!

திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்தரும் பக்தர்கள்
வஞ்சகர் போய் அகல
பொன்னின் செய் மண்டபத்தே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோள்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம்பலத்தில் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி!

திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குண்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி மாரிமுத்து கந்தையா அவர்களின் வாழ்வியல் வரலாற்றுச் சுருக்கம்

பல்வளமும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க மூளாய்க் கிராமத்திலே கடற்கரை ஓரங்களும், வயல்களும் , காடுகளும், ஆலயங்களுமென அழகொளிரும் அதன் தென்பகுதியிலே முன்னொரு காலத்திலே மிகச் சீரோடும் சிறப்போடும்.வாழ்ந்தவர்கள் நாகலிங்கம் ஆச்சிப்பிள்ளை தம்பதியர்களாவர். இவர்கள் இல்லறத்தை நல்லறமாக்கி இனிய வாழ்க்கை வாழ்ந்து வருகின்ற காலத்திலே இவர்களுக்கு எல்லாச் செல்வங்களோடும்

மிகப்பெரிய செல்வங்களான பிள்ளைச்செல்வங்களாக எண்மர் பிறந்து பெற்றோரிலே அன்பும் பாசமும் உடையவர்களாகவும் சகோதர பற்றுக் கொண்டவர்களாகவும் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் முறையே சின்னத்தம்பி என்றும் செல்லமுத்து என்றும் பார்வதி என்றும் முத்துப்பிள்ளை என்றும் முருகேசு என்றும் மாரிமுத்து என்றும் தங்கமுத்து என்றும் அன்னமுத்து என்றும் இனிய பெயர் கொண்டு அழைக்கப்பட்டார்கள்.இந்த எண்மருள்ளேயும் நாங்கள் இங்கே வாழ்வியல் வரலாற்றைப் பதிவு செய்ய விரும்புகின்ற அமரர் மாரிமுத்து அம்மையார் அவர்கள் நாகலிங்கம் ஆச்சிப்பிள்ளை தம்பதிகளுக்கு ஆறாவது பிள்ளையாகவும் பாசத்திற்கினிய பெண் பிள்ளையாகவும் 12.09.1930ல் பிறந்தார்.

அமரர் மாரிமுத்து அவர்கள் பிறந்ததும்

பெற்றோருக்கும் சகோதரங்களக்கும் மிகப்பெரும் சிறப்பெல்லாம் வந்து சேர்ந்ததாக அக்காலத்தவர்கள் சொல்வார்கள். அதனால் அம்மையார் மாரிமுத்து அவர்கள் மேல் பெற்றோர்களும் சகோதர்களும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர்களாகவும் அக்கறை உடையவர்களாகவும் வாழ்ந்து வந்தார்கள். அம்மையார் மாரிமுத்து அவர்களும் எல்லோரிடமும் அன்போடும் பண்போடும் பழகி எல்லோருடைய கவனத்தையும் தன்பால் ஈர்த்து வந்தார். சின்ன வயதிலேயே பலசிறப்புக்களும் கெட்டித்தனங்களும் அம்மையார் மாரிமுத்து அவர்களிடம் குடிகொண்டிருந்தமையைக் கண்ட அவரின் பெற்றோர்கள் அவரை அக்காலத்திலே மிகச்சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கூடமாக விளங்கிய மூளாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலே சேர்த்த நல்ல அடிப்படை கல்வியை பெற்றுக் கொடுத்தார்கள். நல்ல அடிப்படைக் கல்வியை பெற்றுக்கொண்ட அம்மையார் மாரிமுத்து அவர்கள் தன்குடும்பம் மிகப்பெரிய குடும்பமாகவும் தொடர்ந்து கற்பது கடினமாக இருக்கும் என்பதனாலும் அப்போதைக்குத் தான் கற்ற கல்வி போதும்மென்று உணர்ந்தாலும் அடிப்படைக் கல்வியோடு கற்பதை நிறுத்திவிட்டு மிகப்பெரும் பொறுப்புணர்ச்சியோடும் அக்கறையோடும் தன் பெற்றோர்களுக்கும் சகோதரங்களிற்கும் பல வழிகளிலும் உதவி வந்தார். கடின உழைப்பாளியாகவும் திறடைசாலியாகவும் அம்மையார் மாரிமுத்து அவர்கள் விளங்கியமையால் அவருடைய குடும்பம் தலை நிமிர்ந்தது என்று கூடச்சொல்வார்கள்.இது அம்மையாரின் வாழ்வியலில் முக்கியமானதோர் வரலாற்றுப் பதிவாகும்.

இவ்வாறு அம்மையார் மாரிமுத்து அவர்கள் தன் வாழ்வியலை நகர்திதிக்கொண்டு வரும் வேளையிலே அவர் திருமணப் பருவத்தை எட்டிவிட்டதை உணர்ந்து கொண்ட அவரின் பெற்றோர்களும் சகோதரர்களும் அம்மையாருக்கு ஏற்றதோர் மணாளனைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டு அக்காலத்திலே கிராமத்தில் அம்மையாரின் பெற்றோரான நாகலிங்கம் ஆச்சிப்பிள்ளை தம்மதிகளுக்கு இணையான சிதம்பரப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியர்களின் குடும்பத்திலே அமரர்களானதங்கம்மா,ஆச்சிக்குட்டி, லட்சுமி அம்மா அவர்களோடு கூடிப்பிறந்த நான்காவது பிள்ளையான கடின உழைப்பும் திறடைகளும் கொண்டவரான கந்தையா அவர்களை மணம்பேசி ஊர்போற்றும் வகையிலே நல்லதொரு திருநாளிலே மாரிமுத்து கந்தையா திருமணம் இனிதே நிறைவேறியது.

உள்ளத்தால் உருவத்தால் கொள்கையால் மிகமிகப் பொருத்தமானவர்களாகக் காணப்பட்ட மாரிமுத்து கந்தையா தம்பதியர்கள் இல்லற வாழ்க்கையை இனிதே ஓச்சி நல்லறங்கள் பலவாற்றி அன்போடும் பாசத்தோடும் ஒருவரை ஒருவர் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வாழ்க்கை நடாத்துகின்ற காலத்திலே எல்லாச்சிறப்புகள் செல்வங்களோடும் செல்வத்துட் செல்வமான பிள்ளைச் செல்வங்களாக ஒன்பது பிள்ளைகள் பிறந்தார்கள்.

அவர்கள் முறையே குணபாக்கியம் என்றும், குணேஸ்வரி என்றும், வெற்றிவேல் என்றும், வடிவேல் என்றும், யோகேஸ்வரி என்றும், குமாரவேல் என்றும், சித்திரவேல் என்றும், சண்முகவேல் என்றும், பத்மா என்றும் நாமங்கொண்டு வளங்கினார்கள்.

அம்மையார் மாரிமுத்து அவர்களுடைய கணவனார் கந்தையா அவர்கள் வியாபாரத் தொழிலிலே சிற்ந்த விளங்கி நேர்மை நிதானம் நாணயம் எனபவற்றோடு கூடிய பணியினைப் புரிந்து வருகின்ற காலத்திலே குடும்பம் மிகப்பெரிய குடும்பமாக இருந்தமையினாலும் சூழ்நிலைகள் வியாபாரத் தொழிலுக்கு ஏற்றதாக இல்லாமல் இருந்ததாலும் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதற்காக யாரிடமும் கையேந்தக்கூடாது என்ற கொள்கையோடு அம்மையார் தன் கணவனோடு தோழோடு தோழ் நின்று வியாபாரத் தொழிலுக்கு உதவியதோடு தானும் பால் மாடு வைத்துப் பால் விற்றும் விவசாயம் செய்தும் தன் குடும்பத்தை உயர்த்தினார். கல்வி ஒழுக்கம், பண்பாடு, நேர்மை என்பவற்றிலே பிள்ளைகள் உறுதியான பிடிப்போடு இருக்க வேண்டும் என்பதற்காக ஊன் உரக்கம் மறந்து அம்மை யார் அவர்கள் நல்ல அடித்தளம் இட்டுக்கொடுத்தார்.

எங்கேயும் எதிலேயும் கடைமையிலே கண்ணாய் இருக்கும் அம்மையார் மாரிமுத்து அவர்கள் பிள்ளைகளுக்கு நல்ல இல் வாழ்வை அமைத்துக் கொடுப்பதிலேயும் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து தனது மூத்தமகளான குணபாக்கியம் அவர்களுக்கு தங்கள் ரத்தத்தின் ரத்தமான முறைமைத்துனர் இராசலிங்கம் அவர்களுக்கு மணம் முடித்துக் கொடுத்து அவர்களின் பிள்ளைகளான கோகுலதாஸ்லோகதாசன், லம்போதினி ஆகியோரைப் பேரக்குழந்தைகளாகக் கண்டதோடு பேரன் லோகதாசன் பிருந்தா அவர்களைத் திருமணம் செய்து அவர்களின் அன்புச்செல்வமான ஆருத்திரா அவர்களை பூட்டப்பிள்ளையாகவும் பேத்தி லம்போதினி அவர்கள் பட்டப்படிப்பினை மேற்கொண்டு குடும்பத்தின் முதல் பட்டதாரியாக இருப்பதையும் கண்டு மிகமிக

மகிழ்ச்சி கொண்டிருந்தார். அதே போலவே தனது இரண்டாவது மகளான குணேஸ்வரிக்கு தெய்வேந்திரம் அவர்களைத் திருமணம் முடித்து வைத்த முருகானந்தம் எனும் பேரனைப் பெற்றுக் கொண்டதோடு, அவரிற்கு ஜசிந்தா அவர்களைத் திருமணம் செய்து அவர்களின் இல்லறத்தால் கிடைத்த முத்துக்குமுத்தான தீவிதன் அவர்களையும் பீட்டப் பிள்ளையாக கண்டு அகமகிழ்ச்சியோடு வாழ்ந்தார். மேலும் அம்மையார் மாரிமுத்து அவர்கள் தனது மூன்றாவது பிள்ளையும் மூத்தமகனுமான வெற்றிவேல் அவர்களுக்கு சந்திரகுமாரி அவர்களைத் திருமணம் செய்து வைத்து அவரையும் தன் அன்புக்குப் பாத்திரமான மருமகளாக்கிக் கொண்டதோடு அவர்களுக்கும் அவர்களின் இல்லறத்தின் விளைவால் கிடைத்த பிள்ளைச் செல்வங்களான ஸ்ரீவைகுந்தவாசன் வினோதன் ஆகியோரையும் பேரப்பிள்ளைகளாக பெற்று பெருமகிழ்வு கொண்டிருந்தார். அடுத்து அம்மையார் மாரிமுத்து அவர்கள் தனது நான்காவது பிள்ளையும் மகனுமாகிய வடிவேல் அவர்களை கயிலைநாயகி அவர்களுக்கு மணமுடித்து வைத்து அவரையும் தன் மருமகளாக்கிக் கொண்டதோடு அவர்கள் தம் இல்லற வாழ்வில் இன்புற்றிருக்கும் சான்றாகப் பெற்றெடுத்த பிள்ளைகளான கஜநிதி அவர்கள் ஒரு பொலீஸ் உத்தியோகஸ்தராகவும் சாரங்கன் அவர்கள் HND கற்கைநெறியினைப் பூர்த்தி செய்து கொண்டிருப்பவராகவும் மகள் சசி அவர்கள் ஆங்கில மொழியினாலான டிப்ளோமாவை முடித்து ஆசிரிய பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவராகவும் கண்டு பெருமிதம் கொண்டிருந்தார்.

பிள்ளைகள் வரிசையிலே அடுத்ததாக தனது ஐந்தாவது மகளுமான யோகேஸ்வரி அவர்களுக்கு அம்மையார் மாரிமுத்து அவர்கள் கோபாலகிருஸ்ணன் அவர்களைத் திருமணம் செய்து அவரையும் தன் மருமகனாக்கிக் கொண்டதோடு அவர்களுக்கும் அவர்களின் இல்லற இன்பத்தால் கிடைத்த பிள்ளைகளான கஜப்பிரியன், சயந்தன், சுஜீபன், வினோதன், டிலக்சிகா ஆகியோரையும் பேரப்பிள்ளைகள் வரிசையிலே சேர்த்துக்கொண்டதோடு பேரன் சயந்தன் றொக்சி (யாழ் பல்கலைக்கழகம்) அவர்களைத் திருமணம் செய்தும் பேரன் வினோதன் பிரான்ஸ் நாட்டிலே வாழ்தல் கண்டும் மகிழ்ச்சி கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மிகப் பெரும் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்த அம்மையார் அவர்கள் அந்த வரிசையிலே தனது ஆறாவது பிள்ளையும் மகனுமான குமாரவேல் அவர்களுக்கு கலாநிதி அவர்களைத் திருமணம் செய்து வைத்து அவர்களையும் தன் மருமகளாக்கி கொண்டதோடு அவர்களின் அன்புப்பிள்ளைகளான அமுதகாஷன், நிருஜா,கஜானன், கிரிஜன், கார்த்திஜா, கீர்த்திஜா ஆகியோரையும் அன்பிற்கினிய பேரப்பிள்ளைகளாகக் கண்டதோடு பேரன் அமுதகாசன் அவர்களும் பேத்தி நிருஜா அவர்களும் யாழ் பல்கலைக்கழகத்திலே பட்டப்படிப்பினை மேற்கொள்வது கண்டும் அளவிலா மகிழ்ச்சி கொண்டிருந்தார்.

மேலும் அம்மையார் அவர்கள் தனது அன்பிற்கும் பாசத்திற்குமுரிய ஏழாவது பிள்ளையும் மகனுமான சித்திரவேல் அவர்களுக்கு லதாநிதி அவர்களைத் திருமணம் செய்து வைத்து அவர்கள் மகிழ்ச்சியோடு வாழ்வது கண்டும் அவர்களுக்கும் அவர்களின் இல்லறத்தால் விளைந்த முத்துக்களான டிலக்சன்,லக்சிகன் ஆகியேரை பேரக்குழந்தைகளாகக் கண்டதோடு மருமகள் லதாநிதி அவர்கள் பெண் சுகாதார உதவியாளராக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவது கண்டும் பேருவகை கொண்டு வாழ்ந்து வந்தார்.மேலும் அம்மையார் அவர்கள் தனது எட்டாவது பிள்ளையும் மகனுமான சண்முக வேல் அவர்களுக்கு ஜேந்தினி அவர்களை மணம் முடித்து வைத்து அவர்கள் தாய் வீட்டிலே தன்னோடு மகிழ்ச்சியாக வாழ்வது கண்டும் நிம்மதி கொண்டிருந்தார்.

அடுத்தது அம்மையார் அவர்களின் ஒன்பதாவது பிள்ளையும் கடைக்குட்டியும் செல்ல மகளுமான பத்மா அவர்களுக்கு மணிவண்ணன் அவர்களைத் திருமணம் செய்து வைத்து அவரையும் தன் பாசத்திற்கினிய இளைய மருமகனாக்கிக் கொண்டதோடு அவர்களுக்கும் அவர்களின் வாழ்வியல் தத்துவத்தால் கிடைத்த அன்புச் செல்வங்களான தினேஷிகா,நிதர்சன்,பரணிகா ஆகியோரையும் பாசத்தால் விளைந்த பேரக்குழந்தைகளாகவும் கண்டு பேரானந்தப் பேருவெள்ளத்தில் மிதந்தார்.

இவ்வாறு ஒரு குடும்பத் தலைவியாரின் கடமைகளைத் தாய்க்குத் தாயாகவும் தந்தைக்குத் தந்தையாகவும் பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் ஆகியோருக்காக அருமையோடும் பெருமையோடும் செய்து முடித்த அம்மையார் மாரிமுத்து அவர்கள் இறுதிக்காலத்தில் வயது முதிர்ச்சியாலும் தளர்வுற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பிள்ளைகளுக்காக வெளிக்காட்டாமல் தன் அடி மனதிலே ஆழமாகப் பதிந்திருந்த தன் கணவன் மருமகன் ஆகியோரின் இழப்பின் வேதனையாலும் சற்று நோய்வாயப்பட்டுக் காணப்பட்டார். இருந்த போதிலும் இந்நாட்கள் இன்னாருடைய வீட்டிலேயென்று பிள்ளைகளினுடைய வீடுகளிலெல்லாம்வாழ்ந்து வந்த அம்மையாருக்கு மக்களும் மருமக்களும் பேரப்பிள்ளைகள் பூட்டப் பிள்ளைகள் ஆகியோரும் இல்லையென்று எதுவுமே இல்லாமல் சகல உதவிகளையும் வைத்திய உதவிகளையும் செய்து கொடுத்தார்கள்.

ஆனாலும் ஆளுக்கொரு தேதி வைத்து எங்களை ஆட்கொள்கின்ற ஆண்டவன் விடுவானா அம்மையார் அவர்களுக்கு நோய் அதிகரித்துக் கொண்டே சென்றது. ஒரு கட்டத்தில் வைத்தியம் ஒன்றுமே பலனளிக்காமல் போனது. சுமார் தொண்ணூறு ஆண்டுகளாக மற்றவர்களுக்காகவே பம்பரம் போலச் சுழண்டுகொண்டிருந்த வர்ணிக்கவே முடியாத வல்லமைகள் கொண்ட அம்மையார் மாரிமுத்து அவர்கள் படுக்கையானார். ஊறவர்கன் உற்றார் உறவினர்கள் பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் என்று எல்லோரும் அம்மையார் நலன் பெற வேண்டுமென ஆண்டவனைப் பிரார்த்தித்தார்கள். ஆனாலும் அன்று 10.10.2019 தமிழ்மாதம் புரட்டாதி வளர்பிறை திரயோதசித்திதி அம்மையார் அவர்கள் தான் நேசித்த அனைவரையும் சோகத்தால் அதிர வைத்து விட்டு இவ்வுலக வாழ்வினை நிறைவு செய்து தன் தலைவன் தாழினைச் சென்றடைந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் போற்றும் மாரியன்னை போற்றுகின்ற மூளாயூர் காலமும், நேரமும், சூழலும் அன்னையின் காலடியில் தெரிந்தன

மாரி வெள்ளம் மடி சுமக்கும் எம்முயிர் மூளாய் - நல்ல
மார்கழியில் குளம் நிறையும் எம்முயிர் மூளாய்
ஊர் முழுக்க ஊர்ந்து வரும் வீட்டு வெள்ளம் - வந்து
காட்டோடு கலக்குமிடம் எம்முயிர் மூளாய்
மாட்டெழுங்கை மேட்டினிலே மீன்கள் துள்ளும் - நல்ல
காட்டு மாடு மடிகளிலே கன்றாய்க் கௌவும்
ஊட்டிவிடப் பசுக்களெல்லாம் துள்ளி ஓடும் - அந்த
ஊர்ப்பெருமை கொண்டதெல்லாம் எம்முயிர் மூளாய்!

தாய்மடி நாம்பிடிக்கும் தொப்புள்க் கொடி

ஈன்றெடுத்த நம் தாயே இணையேயில்லாத் தெய்வமே
இதயமெனும் கோயிலே அணையாத தீபமே
ஈன்றெடுத்த உன்னுடம்பு ஆண்டவனின் கோயிலம்மா
தாய்மையதில் தெய்வமம்மா அன்பெல்லாம் தீபமம்மா
நாங்களுங்கள் மக்களென்றே மானிலத்தில் புகழ்படைத்தோம்
நீங்களெமை விட்டேக எப்படித்தான் மனம்படைத்தீர்
கல்லறையில் அடைத்துவைத்தால் கைகளினால்உடைத்தெடுப்போம்
கட்டையில் அடுக்கிவிட்டார் பிடிமண்ணால் என்ன செய்வோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மறைவால் மனம்நெகிழும் பிள்ளைகள்

(ஊர்போற்ற நாம்வாழ குறிகாட்டியாய் இருந்த சீர்சுமந்த அம்மாவே எங்குற்றீர் கலங்குகின்றோம்)

நெல்லறுத்துப் புல்லறுத்து நெடுநாளாய் எமைக்காத்து
வெயிலோடும் மழையோடும் உறவாடி எமைவளர்த்து
கல்மேலும் முள்மேலும் நடந்தெம்மை உயரவைத்த
எம்முயிரே அம்மாவே எங்குற்றீர் கலங்குகின்றோம்!

பெயரிலே மாரியென்ற பெயர்கொண்டு வாழ்ந்திருந்து
அன்புடனே பண்பதுவும் பாசமும் தான்பொழிந்து
தன்வழியில் எமையெல்லாம் தடம்புரளா துயரவைத்த
தெய்வமே அம்மாவே எங்குற்றீர் கலங்குகின்றோம்!

உதிரத்தை எம்முள்நிறைத்து உயிரையும் எமுள்புதைத்து
ஜனனத்தால் எமைப்படைத்து பசியாற்றப் பால்சுரந்து
கண்ணிமைக்குள் எமைவைத்து காலத்தால் உயரவைத்த
பொன்மகளே அம்மாவே எங்குற்றீர் கலங்குகின்றோம்!

கோடொன்றுகீறி எமைக்கோட்டுக்குள் ஒழுகவைத்து
காடென்றும் களனியென்றும் தான்அலைந்து உழைத்துவந்து
கூடொண்றுகட்டி அந்தக் கூட்டுக்குள் உணவளித்த
நீடுபுகழ் அம்மாவே எங்குற்றீர் கலங்குகின்றோம்!

ஓர்வயிற்றில் எமைச்சுமந்து ஒற்றுமையாய் வாழவைத்து
பார்முழுதும் நாம்பரந்த பணிபுரியப் பார்த்திருந்து
ஊர்போற்ற நாம்வாழக் குறிகாட்டியாய் இருந்த
சீர்சுமந்த அம்மாவே எங்குற்றீர் கலங்குகின்றோம்!

**பாசமிகு பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமியாரின் பெருமைகளை எண்ணும் மருமக்கள்

(செல்வத்தின் பொருள் சொல்லச் சிந்தைக்குள் தூதுசென்ற
எல்லயில்லா மாமியாரே எமைப்பிரிந்து மறைந்தீரே)

பெற்றருந் பிள்ளைகளை பிரியமுடன் எமக்களித்து
கற்றவித்தை எமக்களித்து கருணைக்கொடை தான்புரிந்து
ஒற்றுமையாய் நாம்வாழ ஓடிஓடித் தூதுசென்ற
அற்புதமே மாமியாரே எமைப்பிரிந்து மறைந்தீரே!

தாய்க்குப்பின் மாமியென்ற மகத்துவத்தை நீர்புரிந்து
சாய்ந்து களைப்பாறிடாது சக்கரம்போல் சுழன்றுவந்து
ஓய்வறியா உழைப்பினிற்காய் உணர்வலைக்குள் தூதுசென்ற
சேய் வடிவே மாமியாரே எமைப்பிரிந்து மறைந்தீரே!

பெண்ணவளின் பெருமைகளை நாமறியத் துணையிருந்து
கண்ணியமாய் வாழ்கின்ற கலைகளையும் புரியவைத்து
எண்ணம்போல் நாம்வாழ இறைவனிடம் அதுசென்ற
பண்பிலுயர் மாமியாரே நமைப்பிரிந்து மறைந்தீரே!

பிறருக்காய் வாழ்வதொன்றே புண்ணியம் எனஉரைத்து
உறவுக்கும் ஊருக்கும் உடலுழைப்பைத் தினந்தந்து
அறவழியில் ஒழுகுவதற்காய் அகத்தினுள்ளே தூதுசென்ற
நிறம்மாறா மாமியாரே நமைப்பிரிந்து மறைந்தீரே!

எல்லோர்க்கும் தனதன்பைச் சமமாகப் பகிர்ந்தளித்து
நல்லோராய் வல்லோராய் நாம்வாழத் தவமிருந்து
செல்வத்தின் பொருள்சொல்ல சிந்தைக்குள் தூதுசென்ற
எல்லையிலா மாமியாரே நமைப்பிரிந்து மறைந்தீரோ!

**மாமியாற்காய்**
**மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகளின் நினைவிலிருந்து

உப்பிட்ட உம் நினைவை உதிரமதில் கலக்கவிட்டு தெப்பமது
கவிழ்ந்ததென்றோ பேத்தியாரே நீர் மறைந்தீர்

பெற்றவரைப் போலஎமைப் பேணியென்றும் அணைத்தவரே
உற்றதெம் உவந்தளித்து உயிரோடு கலந்தவரே
அற்புதத் தெய்வமாய் அவனியிலே உமைக்கண்டோம்
நிற்கதியாய் நுமைவிடுத்தோ பேத்தியார்நீர் மறைந்திட்டீர்!

தாய்மடிக்கு மேலாக உம்மடியில் சுகங்கண்டோம்
பார்வைசெய்வீர் வார்த்தையின்றி பாசமதை நாமுணர்வோம்
ஓய்ந்திடாத உம்முறவால் எமைக்குளிர வைத்திட்டு
மாய்ந்திடாத புகழ்படைத்தோ பேத்தியார்நீர் மறைந்திட்டீர்!

செல்வமேநீர் நடந்துவந்தால் மேனியெல்லாம் சிலுசிலுக்கும்
செல்லமாய்ச்சில வார்த்தைசொன்னால் சொர்க்கலோகம்
அதில்தெரியும்
அல்லும் பகலுமெமை அரவணைத்தே வளர்த்திட்டு
எல்லையெதும் முடிந்ததேன்றோ பேத்தியார்மறைந்திட்டீர்

அப்பம்மா அம்மம்மா என்று உமை நாமழைத்தால்
ஒப்பரிய ஓர் வார்த்தை செப்பிடுயமைக் சிலிர்க்கவைப்பீர்
உப்பிட்ட உம் நினைவை உதிரத்தில் கலக்கவிட்டு
தெப்பமது கவிழ்ந்ததென்றோ பேத்தியார்நீர் மறைந்திட்டீர்

**பேத்தியார் பற்றிப்**
**பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டியின் பெருமை பேசும் பீட்டப்பிள்ளைகள்

நேற்றுவரை நிகரில்லாக் கொள்கையுடன் தான் வாழந்த சாற்றுபுகழ்
மாரித்தாய் நம் பாட்டியாரை நினைவுகூர்வோம்

பாட்டியார் என்றதொரு பதம்கலந்து உணவூட்டி
நாட்டியதோர் கந்தையாக் கொடிபறக்கத் துணையிருந்து
தீட்டியதோர் புத்திக்குள் தினம்புகுந்து அறிவுரைத்த
வீட்டுடைத் தலைவி எங்கள் பாட்டியாரை நினைவுகூர்வோம்

சின்னக் காலெடுத்துக் சிறுநடைகள் நாம் பயில
வண்ணக் கரமெடுத்து வாரியெமைத் தோழ்சுமந்து
முன்னின்றே முத்தாரக் கதைசொல்லிக் கருத்துரைத்த
மன்னுபுகழ் மாதரசி நம்பாடடியாரை நினைவு கூர்வோம்

முத்துக்கு முத்தாக தன்வம்சம் தளைத்தோங்க
நித்தமெங்கள் முற்றத்தில் தளைத்தோங்கி நிழல்பரவி
மொத்தமெங்கள் வாழ்வுக்காய் சித்தமுற உயிர்சுமந்து
வித்தகத்து மாரித்தாய் நம் பாட்டியாரை நினைவுகூர்வோம்

பாட்டனாரை இழந்தபின்பும் விட்டுக்குள் முடங்காமல்
ஈட்டியதோர் வம்சத்தின் பெயர்துலங்கத் தினமுழைத்து
வாட்டமுறா தெமையெல்லாம் நெறிப்படுத்தி வாழவளித்த
சோட்டைமிகு மாரித்தாய் நம்பாடடியரை நினைவுகூர்வோம்!

காற்றடிக்கும் திசையோடிக் காலம்விடும் நிலைமாற்றி
ஊற்றெடுக்கும் உறவோரின் பாசத்தால் பசிமறந்து
நேற்றுவரை நிகரில்லாக் கொள்கையுடன் தானட வாழ்ந்த
சாற்றுபுகழ் மாரித்தாய் நம்பாட்டியாரை நினைவுகூர்வோம்!

**பீட்டப்பிள்ளைகளின்**
**பிரியமான பாட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

பிறக்கும்போதே எங்களுக்கு இறப்பும் நிச்சயிக்கப்பட்டுள்ளது. அது எப்போது என்பது தெரியாமையாலேயே நாங்கள் இறப்பின் போது துயரப்படுகின்றோம். இறப்பும் இன்னொரு பிறப்பிற்காகத்தான் என்ற உண்மையை உணர்ந்துகொள்வோமேயானால் நாம் இறப்பிற்காக வருந்த வேண்டிய அவசியமே இல்லை. அந்தப் பிறப்பும் இறைவனை நெருங்கிச் செல்கின்ற மேலான பிறப்பென்றால் அதைவிட எங்களுக்கு வேறுஎன்ன யணவேண்டும். அந்தவகையிலே அம்மையார் திருமதி கந்தையா மாரி முத்து அவர்களும் இறப்பு என்பதைச் சந்தித்து இறைவனை நெருங்கிச் செல்கின்ற மேலான பிறப்பினையே எடுத்துள்ளார் ஆதலினால் கவலைகளையும் துயரங்களையும் தூக்கி எறிந்துவிட்டு அவரின் நினைவோடு அவர் விரும்புகின்ற சிறந்த வாழ்க்கையை வாழ்வீர்களாக!

கந்தையா என்றதொரு கண்ணியவான் கரம்பற்றி
சிந்தை கலங்காது சிறப்புடனே வாழ்வமைத்து
சுந்தர மக்களாரைச் சுடர்விடவே ஈன்றெடுத்து
சொந்தமெனப் பந்தமெனக் சுடர்பரப்பி நின்றிருந்த
விந்தைமிகு தலைவியார் மாரிமுத்து மறைந்ததனால்
வெந்து உள்ளம் வெதும்பியே நொந்துநீர் கலங்கிடாதீர்
அந்தமாகி இல்லாதான் அடிசேர்ந்தார் அவரென்றே
வந்துமனம் ஆறியே தேறியும் வாழ்ந்தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மீக வாழ்த்துதலுக்கும் ஆத்மீகத் தூற்றுதலுக்கும் வலிமை உண்டு. ஆதலினால் அன்புடைய அனைவரையும் நாம் ஆத்மீக வாழத்துதலுக்கு உட்படுத்துவோமாக

வாழிநீர் மூளையூர் மூத்தோன் வாழி
வள்ளியொடு தெய்வானை வடிவேலன் வாழி
நுண்ணிஇறை பூசைசெய்யும் அந்தணர்கள் வாழி
நுறுஞ்சமய நெறி வளர்ககும் பெரியார் வாழி
எண்ணிறைந்த பாடசைக்கும் புலவோர் வாழி
ஏற்புடனே கேட்டருளும் அன்பர் வாழி
வாழிரும் ஐயப்ப காயத்திரி அம்பாள் வாழி
வளர்கமய நெறி வாழி வாழி வாழி!

வான்முகில் வழாதுபெய்க மலவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நுற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

## பார்வைகள் பலவிதம்

அறிமுகம் இல்லாதவர்களின் பார்வையில் நாம் எல்லோரும் சாதாரண மனிதர்கள், பொறாமைக்காரரின் பார்வையில் நாம் அனைவரும் அகந்தைக்காரர்கள், புரிந்துகொண்டோரின் பார்வையில் நாம் அற்புதமானவர்கள், காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களின் பார்வையில் நாம் கெட்டவர்கள், எமைப் பற்றி ஒவ்வொருவருக்கும் தனியானதொரு பார்வை உண்டு. ஆதலினால் பிறரிடம் எங்கள் விம்பத்தை அழகாக்கிக் காட்ட சிரமப்படுவதை விட்டு விட்டு இறைவனுடைய திருப்தியே எங்கள் அனைவருக்கும் போதுமானதாகும். மனிதர்களைத் திருப்திபடுத்துதல் என்பது எட்ட முடியாத இலக்கு. இறைவனைத் திருப்திபடுத்துதல் என்பது அடையக்கூடிய இலக்கு. எனவே எட்டமுடியாததை விட்டு விட்டு அடையக் கூடியதை அடைந்து விடுங்கள். அப்போது நீங்கள் எல்லோருமே அற்புதமானவர்கள் ஆவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித தர்மம்

ஏழ்மையிலும் - நேர்மை
கோபத்திலும் - பொறுமை
தோல்வியிலும் - விடாமுயற்சி
தரித்திரத்திலும் - பரோபகாரம்
துன்பத்திலும் - தைரியம்
செல்வத்திலும் - எளிமை
பதவியிலும் - பணிவு

## பண்புச் செயல்கள்

1. தகுந்தவர்களுக்கு தானம் செய்
2. ஒழுக்க போதனைகளைப் பின்பற்று
3. நல்லெண்ணங்களைப் பின்பற்று
4. பிறருக்குப் பணிசெய் பிறரைக் கவனித்துக் கொள்
5. பெற்றோரையும் மூத்தோரையும் மதித்து நட அவர்களுக்கு வேண்டுவன செய்
6. உன் புண்ணியங்களாய் ஒரு பகுதியை பிறருக்குக் கொடு
7. பிறர் உனக்குக் கொடுக்கும் புண்ணியங்களை ஏற்றுக்கொள்
8. நல்ல கருத்துக்களை கேட்டு உயர்
9. நல்லெண்ணங்களை நினை
10. நல்ல கருத்துக்களைப் பிறருக்குக் கற்றுக்கொடு. உன்குற்றங்களை நீக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்திக்க சில வரிகள்

- எங்கே ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது.

- பிரச்சினைகளை எதிர்நோக்கும் போது முட்டாள்கள் புலம்புகிறார்கள், புத்திசாலிகள் அதிஷ்டசாலிகள் ஆகின்றார்கள்.

- கௌரவத்தைப் பெற்றிருப்பதை விட அதனைப் பெற உண்மையாகத் தகுதி பெற்றிருப்பது மேலானதாகும்.

- கேட்பதன் மூலம் அறிவு வருகிறது. பேசுவதன் மூலம் விசனம் வருகிறது.

- வழுவழுத்த உறவிலும் பார்க்க வன்மையாக பகை நன்று.

- கல்வி ஒருவனை நல்ல மனிதப்பண்பு உடையனாகவும் நற்குடி மகனாகவும் ஆக்குகின்றது

## உலகின் பல்வேறுதுறையை தோற்றுவித்தவர்கள், ஆரம்பகர்த்தாக்கள்

| | | |
|---|---|---|
| சாரணர் இயக்கம் | - | பேடன் பவல் பிரபு |
| கணக்கியல் | - | லூக்கா பெசி யொலி |
| கணனி | - | சாள்ஸ் பபேஜ் |
| கணிதம் | - | ஆக்கிமிடிஸ் |
| சமூகவியல் | - | மக்ஸ் வெபர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் மொழிகள்

சிரிப்பிற்கு நேரம் ஒதுக்குங்கள் அது இதயத்தின் ஓசை
சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் அது சத்தியத்தின் பிறப்பிடம்
விளையாட நேரம் ஒதுக்குங்கள் அது இளமையின் இரகசியம்
படிக்க நேரம் ஒதுக்குங்கள் அது அறிவின் ஊற்று
நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள் அது மகிழ்ச்சிக்கு வழி
உழைக்க நேரம் ஒதுக்குங்கள் அது வெற்றியின் விலை

## உறவுகள் மேம்பட

- நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள்.
- எந்த விஜயத்தையும் பிரச்சனையையும் நாசுக்காக கையாளுங்கள் விட்டுக்கொடுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள்.
- குறுகிய மனப்பாண்மையை விட்டொழியுங்கள்.
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாமே இரண்டு

| | | |
|---|---|---|
| வணங்கத்தக்கவர்கள் இரண்டு | - | தாயும், தந்தையும் |
| வந்தால் போகாதது இரண்டு | - | புகழ், பழி |
| போனால் வராதது இரண்டு | - | மானம், உயிர் |
| தானாக வருவது இரண்டு | - | இளமை, முதுமை |
| நம்முடன் வருவது இரண்டு | - | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதது இரண்டு | - | பசி, தாகம் |
| பிரிக்க முடியாதது இரண்டு | - | பந்தம், பாசம் |
| அழிவைத் தருவது இரண்டு | - | பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும் சமமானது இரண்டு | - | பிறப்பு, இறப்பு |
| வருவதும் போவதும் இரண்டு | - | இன்பம், துன்பம் |

| | | |
|---|---|---|
| மிக மிக நல்ல நாள் | - | இன்று |
| மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| மிகவும் கொடிய நோய் | - | பேராசை |
| மிகவும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விஷயம் | - | பொறாமை |
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிகபேச்சு |
| செய்யவேண்டியது | - | உதவி |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| மிகப் பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| மிகப் பெரிய தேவை | - | சமயோஜித புத்தி |
| நம்பக் கூடாதது | - | வதந்தி |
| செய்யக் கூடாதது | - | உபதேசம் |
| விலக்க வேண்டியது | - | விவாதம் |
| நழுவவிடக் கூடாதது | - | வாய்ப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் எல்லோருக்கும் எமது நன்றிகளும் நல்வாழ்த்துகளும் உரித்தாகட்டும்

எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய குடும்பத் தலைவியார் திருமதி மாரிமுத்து கந்தையா அவர்கள் இவ்வுலகில் வாழ்வியலை மேற்கொண்டிருந்த காலத்திலே அவரை அன்போடு நேசித்தவர்கட்கும். அவர் நோய்வாய்ப் பட்டிருந்த காலத்தில் அவரை அணுகி நலம் விசாரித்து ஆறுதல் அளித்தவர்கட்கும் அவருக்குத் தேவையானபோது தேவையான வைத்திய உதவிகளைப் புரிந்தவர்கட்கும். அவர் காலத்தால் அழியாத காவியமாகிவிட்ட செய்தி கேட்டு ஓடோடி வந்து வேண்டிய அனைத்து உதவிகளையும் புரிந்தவர்கட்கும், கொட்டுகின்ற மழையிலேயும் அவரின் இறுதிக் கிரிகைக்காக பலவழிகளிலும் படாதபாடுபட்ட தியாக உள்ளங்கொண்டவர்கட்கும், இறுதிக்கிரிகைகளிலே நீண்டநேரம் காத்திருந்து அனுதாபம் தெரிவித்தவர்கட்கும் மலர்மாலைகள் கண்ணீர் அஞ்சலிகள் வெகுசனத்தொடர்புசாதனங்கள் மூலம் துயர் பகிர்ந்தோர்க்கும். காலம் நேரம் எதையுமே பொருடபடுத்தாமல் நீண்ட தூரம் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு மயானம்வரை வந்து மரியாதை செலுத்தியோர்க்கும் கடந்த முப்பது நாட்களாக எமது இல்லறம் வந்து எல்லா வகையான அனுசரனைகள் புரிந்தவர்கட்கும், இறுதிக்கிரிகைகளில் ஒவ்வொரு நகர்வுகளையும் உரிய முறையில் நகர்த்தியவர்க்கும், எமது அன்பான அழைப்பினை ஏற்று அந்தியேட்டி வீட்டுக் கிருந்திய நிகழ்வுகளில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்தவர்கட்கும். மற்றும் எல்லா வழிகளிலும் உடல் உள ரீதியாக உதவிய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் நாம் எமது காலத்தால் அழியாத நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றிகள் பல கோடி

இங்கனம்,
குடும்பத்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி மாரிமு

## வ

***நாகலிங்கம் + *ஆச்சிப்பிள்ளை**

- *சின்னத்தம்பி
- * செல்லமுத்து
- *பார்வதி
- *முத்துப்பிள்ளை
- *முருகேசு
- *மாரிமுத்து
- *தங்கமுத்து

## மாரிமுத்

- குணபாக்கியம் + இராசலிங்கம்
  - கோகுலதாஸ்
  - லோகதாசன் + பிருந்தா
    - ஆருத்திரா
  - லம்போதினி
- குணேஸ்வரி + *தெய்வேந்திரம்
  - முருகானந்தம் + யசிந்தா
    - தீவிதன்
- வெற்றிவேல் + சந்திரகௌரி
  - ஸ்ரீவைகுந்தவாசன்
  - வினோதன்
- வடிவேல் + கயிலைநாயகி
  - கஜநிதி
  - சாரங்கன்
  - சசி
- யே + கோபா
  - கஜப
  - சயந்
  - சுஜீப
  - வினே
  - டிலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முத்து கந்தையா அவர்களின்**

**ம்சாவழி**

***சிதம்பரப்பிள்ளை + *வள்ளியம்மை**

*தங்கம்மா *ஆச்சிக்குட்டி *லட்சுமிஅம்மா *கந்தையா

த்து அன்னமுத்து

**த்து கந்தையா**

| | | | | |
|---|---|---|---|---|
| யோகேஸ்வரி | குமாரவேல் | சித்திரவேல் | சண்முகவேல் | பத்மா |
| + | + | + | + | + |
| பாலகிருஸ்ணன் | கலாநிதி | லதாநிதி | ஜெயந்தினி | மணிவண்ணன் |
| ஜப்பிரியன் | அமுதகாசன் | டிலக்சன் | | தினேஸிகா |
| ந்தன் + றெக்சி | நிருஜா | லக்சிகன் | | நிதர்சன் |
| ரீபன் | கஜானனன் | | | பரணிகா |
| னோதன் | கிரிஜன் | | | |
| க்சிகா | கார்த்திஜா | | | |
| | கீர்த்திஜா | | | |

* அமரரைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தாரம்

அன்போடு வாழ்வதையே இலட்சியமாய் கொள்ளுங்கள்

ஆசைகளால் மற்றவரை யோசிக்க வைத்திடாதீர்

இடர்களுக்கு பின்னர்தான் ஏற்றமுண்டு அறியுங்கள்

ஈன்றோரைத் தெய்வமாய் இதயத்துள் போற்றுங்கள்

உழைத்துண்டு வாழுங்கள் ஊருலகம் உமைப்போற்றும்

ஊக்கத்தின் முடிவே உயர்வுக்குள் உமைச்சேர்க்கும்

எனக்கென்று தேடாமல் எங்களுக்காக தேடுங்கள்

ஏழ்மையே செல்வத்தின் ஏணிப்படி ஏறுங்கள்

ஐயம் என்று தோன்றினால் அறிஞரோடு பேசுங்கள்

ஒருவரும் தன்நலத்தால் உயர்ந்ததில்லை உணருங்கள்

ஓயாது உழைப்பின்றேல் அது காயாத மரமேதான்

[ஔ] அவ்வாறு வாழ்வதே மனிதத்தின் கோட்பாடும்

[ஃ] அகிதினால் இயன்றவரை மானிடத்தைப் பேணுங்கள்



"இதுவே என் வாழ்க்கையின் குறிக்கோளும் அறிவுரையும் ஆகும்"

இங்ஙனம்

திருமதி. மாரிமுத்து கந்தையா

யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ் - 021 221 7030/077 1974875

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org